# AJWS நிதியுதவி

## அமெரிக்க யூதர்களின் உலக சேவை

### நிதியுதவிக்கான எமது அர்ப்பணிப்பு

நீதியை உருவாக்குவதற்கான யூதாயிசத்தின் கட்டளையினால் உந்தப்பெற்ற அமெரிக்க யூதர்களின் உலக சேவை (AJWS) ஆனது, 1985ஆம் ஆண்டிலிருந்து ஆசிய, ஆபிரிக்க, அமெரிக்க அடிநிலை மக்களின் அபிவிருத்திக்காகவும் மனித உரிமைகளுக்காகவும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. இந்தக் கண்டங்களிலுள்ள உள்ளூர் நிறுவனங்களுக்கு நிதியுதவி செய்வதனூடாக மாற்றத்துக்காக செயற்படும் மக்களுடனும் சமூகங்களுடனும் ஐக்கியப்படுகிறது. அடிநிலை மக்களின் தலைவர்களினதும் ஆதரவாளர்களினதும் பாரிய முயற்சிகளுடன் நாம் தொடர்புபட்டு அவற்றுக்கு உதவிடும் போது ஒருங்கே எமது வேலைகளும் அவர்களின் வேலைகளும் பலப்படுகிறது.

தூர கிராமப்புற பிரதேசங்களிலும் நகர்ப்புற பிரதேசங்களிலும் யுத்த பிரதேசங்களிலும் செயற்பட்டுவரும் மக்கள் அடிப்படை அமைப்புகளுக்கு நிதி வழங்குவதன் மூலம், AJWS ஆனது பாரம்பரிய அபிவிருத்தி முயற்சிகளினால் தமது தேவைகளை பெரும்பாலும் பூர்த்தி செய்துகொள்ள முடியாதிருக்கும் மக்களை அணுகுகிறது. இந்தப் பிரிவினர் தமது உள்நாட்டு அரசாங்கங்களாலும் சமூகங்களாலும் எப்போதும் விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதன் காரணமாக இந்தப் பிரிவினருடன் வேலை செய்வது என்பதன் அர்த்தம், பொதுச் சேவைகளைக் கோருவதற்கும், மனித உரிமைகள் மதிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காகவும் பாரபட்சத்தைக் குறைப்பதற்காகவும் கோரிக்கை செய்யும் முயற்சிகளுடன் சேவைகளையும் சமூக அபிவிருத்தியையும் இணைப்பதாகும்.

எமது பங்காளர்கள் மாற்றங்களை உருவாக்கும் எண்ணமும் அர்ப்பணிப்பும் முயற்சியும் உடையவர்கள். நாளாந்தம் அவர்கள் வறுமைக்கும் பாரபட்சத்துக்குமான தீர்வுகளைக் கட்டியெழுப்புகிறார்கள். தாம் வேலைசெய்யும் பகுதிகளில் மாத்திரமன்றி அரசாங்கத்தின் உயர் மட்டத்திலும் மாற்றங்களை உருவாக்குவதற்காக வழிகாட்டல் செய்பவர்கள். தாம் செய்யும் வேலையில் பற்றுடையவர்கள். அவர்களின் வெற்றிகளினால் நாங்கள் ஈர்க்கப்பட்டுள்ளோம்.

இந்தப் பணிகளை உங்களுடன் பரிமாறிக்கொள்வதில் பெருமிதமும் கௌரவமும் கொள்கிறோம்.

ருத் மெசின்ஜர் (Ruth Messinger)
தலைவர்

கேற் குறோஜர் (Kate Kroeger)
நிதியுதவிக்கான பணிப்பாளர்

# நிதியுதவி செய்வதற்கான கொள்கைகளும் மூலோபாயங்களும்

## ஒத்துழைப்புக்கான மூலோபாயங்கள்

AJWS ஆனது, தனது நிதியுதவிப் பணியை ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய நான்கு மூலோபாயங்களுக்கூடாக மேற்கொள்கிறது:

நிதியுதவி: AJWS ஆனது, உள்ளூர் நிறுவனங்கள் சமூக அபிவிருத்திக்கும் சமூக மாற்றத்துக்குமான தமது சொந்த செயல் நோக்குகளையும் திட்டங்களையும் அமுல்படுத்துவதற்காக அவற்றுக்கு நெகிழ்வான, நீண்டகால அடிப்படையிலான நேரடி நிதியுதவியை வழங்குகிறது.

பங்காளித்துவம்: AJWS ஆனது, எம்மால் நிதியுதவி பெறும் நிறுவனங்கள் ஏனைய வளங்களையும் பயிற்சிகளையும் கொள்கை உருவாக்கல் அங்கங்களையும் பெற்றுக்கொள்வதற்காக, ஏனைய நிதி வழங்கல் நிறுவனங்கள், சர்வதேச வலைப் பின்னல்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றுடன் ஆக்கபூர்வமான பங்காளித்துவத்தைப் பேணுகிறது. முக்கிய சர்வதேச மற்றும் தேசிய நிறுவனங்களுக்கு Collegial Partnership Grants Program மூலம் ஒத்துழைப்பு வழங்குகிறது.

ஆற்றல் அபிவிருத்தி: AJWS ஆனது, தாம் நிதியுதவி செய்யும் நிறுவனங்கள் தொண்டர்களுடன் இணைந்தும், குழுக் கற்கைகள், மதிப்பீடுகள், பின்னூட்டல் பயிற்சிகள்

மூலமும் தமது நிறுவன ஆற்றலை கட்டியெழுப்புவதற்கான வாய்ப்புகளை வழங்குகிறது. உள்நாட்டு பயிற்சி வலைப் பின்னல்களுக்கு நிதியுதவி வழங்குவதன் மூலம் உள்ளூர் ஆற்றல் அபிவிருத்தி வழங்குனர்களின் களத்தை விரிவாக்குகிறது.

பரிந்துரைப்பு: AJWS ஆனது, அடிநிலை மக்களின் குரல்கள் தேசிய மற்றும் சர்வதேசிய கொள்கை விவாதங்களில் உட்படுத்தப்படுவதற்கு உதவுகிறது. தம்மால் நிதியுதவி பெறும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் முக்கிய கூட்டங்களிலும் கொள்கை உருவாக்கல் மாநாடுகளிலும் பங்குபற்றுவதற்கான பயணக் கொடுப்பனவுகளை வழங்குகிறது. அத்துடன், நிதியுதவி பெறும் நிறுவனங்களினதும் அவர்களின் நட்பு நிறுவனங்களினதும் திறமைகளையும் குரல்களையும் வெளிக்கொண்டுவரும் பிராந்திய அளவிலான பரிந்துரைப்பு நிறுவனங்களுக்கும் நிதியுதவி செய்கிறது.

## நிதியுதவிக் கொள்கைகள்

AJWS ஆனது, நீதியும் சமத்துவமுமுள்ள ஒரு உலகை உருவாக்குவதற்காக வேலை செய்யும் அடிமட்ட சமூகங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குகிறது. இந்த வேலையானது மனித உரிமைகள் பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் விழுமியங்கள் மற்றும் நியமங்களினால் வழிநடத்தப்படுகிறது: *"மானுடக் குடும்பத்தின் அனைத்து அங்கத்தவர்களினதும் கௌரவம் மற்றும் சமத்துவமானதும் பிரிக்கமுடியாததுமான உரிமைகளை இனங்காண்பதே உலகில் சுதந்திரத்துக்கும் நீதிக்கும் சமாதானத்துக்குமான அடித்தளமாகும்".*

AJWS உம் அதன் பங்காளிகளும் கீழ்க்காணும் விடயங்களைத் திடமாக நம்புகின்றனர்:

- அடிமட்ட அமைப்புகள் தமது சமூகங்களினதும் நாடுகளினதும் அபிவிருத்திக்காக தமது சொந்தத் திட்டங்களை உருவகப்படுத்தி, விளக்கி, அமுல்படுத்துகிற சிறந்த தளங்களாகத் திகழ்கின்றன.

- மனித உரிமைகள் மறுக்கப்படுகின்ற போது சமூக அபிவிருத்தி நடைபெற முடியாது.

- பெண்கள் மாற்றத்துக்கும் சமூக அபிவிருத்திக்குமான தீர்மானகரமான முன்னோடிகளாக உள்ளனர். பால்நிலை அடிப்படையிலான வன்முறையையும்

அடக்குமுறையையும் எதிர்ப்பதற்கு பெண்கள் முழுமையாக வலுப்படுத்தப்படாத பட்சத்தில் சமூக வாழ்வு உண்மையில் மலர முடியாது.

- வறுமையினாலும் மனித உரிமை மீறல்களினாலும் பாதிக்கப்பட்டிருக்கும் விளிம்புநிலை சமூகங்கள் உள்ளார்ந்து அணிதிரட்டப்படும் போது மாற்றத்துக்கும் அபிவிருத்திக்குமான வலுமிக்க முகவர்களாகுகின்றனர்.

## நிதியுதவிக்கான தொனிப்பொருள்கள்

AJWS ஆனது, ஆபிரிக்க, ஆசிய, அமெரிக்கக் கண்டங்களில் கீழ்க்காணும் விடயங்கள் தொடர்பாக செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் மக்கள் அடிப்படை அமைப்புகளுக்கு உதவுகிறது:

நிலையான வாழ்வாதாரம் மற்றும் நிலையான அபிவிருத்தி: இந் நிதியுதவியானது பொருளாதாரத்தையும் சூழலியலின் நிலையான தன்மையையும் மேம்படுத்துவதற்கான அடிமட்ட அமைப்புகளின் ஆற்றலை திடப்படுத்துகிறது, நியாயமான உழைப்புத் தரங்களை ஊக்குவிப்பதுடன் பெண்களினதும் விளிம்புநிலைச் சமூகங்களினதும் சமூக அந்தஸ்தை அதிகரிக்கச் செய்கிறது. முன்னுரிமை வழங்கப்படும் விடயங்கள்:

- நிலையான விவசாயம், உயிரினப் பல்வகைத் தன்மை மற்றும் உணவுப் பாதுகாப்பு
- காணி மற்றும் வளங்களுக்கான உரிமை
- பொருளாதார வாய்ப்புகள்
- சேரிப்புற மற்றும் நகர்ப்புற அபிவிருத்தி

சமூக சுகாதாரம்: AJWS ஆனது, சுகாதார சேவைகளை பெற்றுக்கொள்ளும் வாய்ப்புகளை அதிகமாக்குவதன் மூலமும் நோய்களைத் தடுப்பதிலும் கட்டுப்படுத்துவதிலும் சமூகத்தின் ஈடுபாட்டை உயர்த்துவதன் மூலமும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையை இல்லாதொழிப்பதன் மூலமும் சமூகத்தின் சுகாதாரத் தரங்கள் விருத்தியாவதற்கு உதவுகிறது. முன்னுரிமை வழங்கப்படும் விடயங்கள்:

- HIV/AIDS மற்றும் ஏனைய நோய்கள் பரவுவதைத் தடுப்பதுடன் பராமரிப்பு, உதவி, கல்வி மற்றும் பரிந்துரைப்பு வழங்குதல்

- பெண்கள் மற்றும் சிறுவர்களின் சுகாதாரம் மற்றும் மனித உரிமைகள்
- சுகாதார பராமரிப்பு முறைகளை வலுப்படுத்தல்
- வன்முறைத் தடுப்பு

அனைவருக்குமான கல்வி: AJWS நிதியுதவியானது பாடசாலை பொதுக் கல்வியை பலப்படுத்துவதுடன் பெரும்போக்கிலான பாடசாலைக் கல்வி முறையிலிருந்து விடுபட்டிருக்கும் முறைசாராக் கல்வியையும் இளைஞருக்கும் வளர்ந்தவர்களுக்குமான தொழில்சார் கல்வியையும் பலப்படுத்துகிறது. முன்னுரிமை வழங்கப்படும் விடயங்கள்:

- சிறுமிகள், பெற்றோரை இழந்த மற்றும் யுதத்தில் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கான கல்வி வாய்ப்பை விரிவாக்குதல்
- ஆசிரியர் பயிற்சி, பாடவிதானத்தை அபிவிருத்தி செய்தல், சமூகத்தின் ஈடுபாடு மற்றும் பாடசாலைகளை மேற்பார்வை செய்தல் மூலம் கல்வித் தரத்தை உயர்த்துதல்
- தொழில்சார் மற்றும் எழுத்தறிவுப் பயிற்சிக்கு உதவுதல்
- ஆரம்பநிலை சிறுவர் அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவுதல்

முரண்பாடு மற்றும் அவசர நிலைமைகளின் போது சமூகத்தின் பங்களிப்பு: அனர்த்தங்களினாலும் முரண்பாடுகளினாலும் பாதிக்கப்பட்ட சமூகங்கள் சமாதானத்தையும் அபிவிருத்தியையும் நோக்கி முன்னேறுவதற்காக எடுக்கும் முயற்சிகளுக்கு AJWS உதவுகிறது. முன்னுரிமை வழங்கப்படும் விடயங்கள்:

- அனர்த்தங்களின் போது சர்வதேச மற்றும் சமூகத்தினால் முன்னெடுக்கப்படும் தலையீடுகள், தயாராயிருத்தல் மற்றும் இடர்குறைப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்தல்
- உளசமூக ஒத்துழைப்பு வழங்குதல்
- போராளிகள் குறிப்பாக சிறுவர்களை ஆயுத நீக்கம் செய்து சமூகத்தில் மீள ஒருங்கிணைத்தல்
- குறிப்பாக பெண்கள் மற்றும் இளைஞர்களினால் முன்னெடுக்கப்படும் சமாதான மற்றும் பொருளாதார வலுவூட்டல் முயற்சிகளுக்கு உதவுதல்
- நிலையான வாழ்வாதாரம், சமூக சுகாதாரம் மற்றும் அனைவருக்குமான கல்வி ஆகியவற்றை முன்னெடுப்பதின் மூலம் அனர்த்தத்திலிருந்து அபிவிருத்திக்கு மாறுதல்

சமூகத்தின் குரல் - குடிசார் மற்றும் அரசியல் பங்கேற்பு: AJWS ஆனது, தமது வாழ்வில் நேரடியாக தாக்கத்தைச் செய்யும் கொள்கைகளையும் திட்டங்களையும் சமூகங்கள் தாமே வடிவமைக்கும் முயற்சிகளுக்கு உதவுகிறது. கீழ்க்காண்போரின் உரிமைகளை உயர்த்துவதற்காக உள்ளூர் நிறுவனங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்க உயரிய முன்னுரிமை வழங்கப்படும்:

- பெண்கள்
- சிறுவர்கள், இளைஞர்கள், வளர்ந்தோர்
- ஆதிக் குடிகள்
- மத மற்றும் இன சிறுபான்மையினர்
- பாலியல் தெரிவு சார்ந்து சிறுபான்மையினராய் இருப்போர்
- அகதிகள் மற்றும் உள்ளார்ந்து இடம்பெயர்ந்தோர்
- HIV/AIDS உடன் வாழ்வோர்
- ஊனமுற்றோர்
- விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள்

# அமெரிக்காவில் AJWSஇன் நிதியுதவி

AJWS ஆனது, அமெரிக்காவில் மேற்கொள்ளும் வேலைத்திட்டத்தில் கரீபியன், மெசோஅமரிக்கா, தென் அமெரிக்கா ஆகியவற்றைச் சார்ந்த 10 நாடுகளை உள்ளடக்கியுள்ளது. இந்தப் பிராந்தியத்திற்கான நிதியுதவியானது ஆதிக்குடிகள் மற்றும் ஆபிரிக்க வம்சாவளியினர், பெண்கள் மற்றும் இளைஞர்கள்; HIV/AIDS உடன் வாழ்வோர் மற்றும் பாலியல் தெரிவு சார்ந்து சிறுபான்மையினராய் இருப்போர் ஆகியோரின் உரிமைகளை இலக்காகக் கொள்கிறது

AJWS ஆனது, மெக்சிக்கோ, கொலம்பியா, பொலிவியா, பேரு, ஹொன்டுராஸ் ஆகிய நாடுகளில் ஆதிக்குடிகள் மற்றும் ஆபிரிக்க வம்சாவளியினர் ஆகியோரின் மக்கள் நிறுவனங்கள் தமது மூதாதையரின் நிலங்களையும் இயற்கை வளங்களையும் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளும் வேலைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குகிறது. பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய பாரிய அளவிலான தொழிற்துறைத் திட்டங்களை எதிர்க்கவும் சுய நிர்ணயத்துக்கும் சமூக மற்றும் அரசியல் பங்கேற்புக்குமான தமது கூட்டான

உரிமைகளை முழுமையாக உணர்ந்துகொள்ளச் செய்யும் வேலைத்திட்டங்களுக்கும் ஒத்துழைப்பு வழங்குகிறது.

எல்சல்வடோர், மெக்சிக்கோ, ஹெய்ட்டி, கொலம்பியா, நிக்கரகுவா ஆகிய நாடுகளில் AJWS ஆனது, நிலையான விவசாயம், உள்ளூர் வர்த்தகம், காணி உரிமைக்கான பரிந்துரைப்புகள் ஆகியவற்றை அபிவிருத்தி செய்யும் முயற்சிகளுக்கு உதவுகிறது. பல வருடகால தாராளமயமாக்கப்பட்ட வியாபாரம், சூழலியல் வீழ்ச்சி, சிறியளவிலான விவசாய முயற்சிகள் அரசினால் புறக்கணிக்கப்பட்டமை ஆகிய அழிவுகளிலிருந்து மீள்வதற்கான முயற்சிகளுக்கும் ஒத்துழைப்பு வழங்குகிறது.

பெண்கள் மற்றும் இளைஞர்களின் காத்திரமான பங்களிப்பினைச் சார்ந்துள்ள வினைதிறன் மிக்க, அனைவருக்கும் கிடைக்கக்கூடிய, சமத்துவமான சுகாதார மற்றும் கல்வி முறைகள். கௌதமாலாவில் AJWS பங்காளிகள் உயர் தரமான இருமொழி கலாச்சார ஒருமைப்பாட்டுக் கல்வியை வழங்கும் சமூக அடிப்படையிலான பாடசாலைகளை நடத்துகின்றனர். பேரு, பொலிவியா, மெக்சிக்கோ ஆகிய நாடுகளில் அடிநிலை பெண்கள் குழுக்கள் பாரபட்சமான சுகாதாரக் கொள்கைகளுக்கும் பால்நிலை வன்முறைக்கும் எதிராக செயற்படுகின்றன. எல்சல்வடோரிலும் ஹொன்டுராசிலும் பங்காளிகள், பாலியல் மற்றும் மறுஉற்பத்தி சுகாதாரம் சார்ந்து இளைஞர்களை பயிற்றுவிப்பதுடன் பாலியல் தெரிவு சார்ந்து சிறுபான்மையினராய் இருப்போரைப் பாதிக்கும் பிரச்சினைகளை வெளிக்கொணர்வதற்கும் அவர்களைப் பயிற்றுவிக்கின்றனர்.

வன்முறையும் ஆயுத முரண்பாடும் காணப்படும் பிரதேசங்களில் AJWS பங்காளிகள் சமாதானத்தையும் பாதுகாப்பையும் முன்னேற்றும் அதேநேரம் மக்களின் வாழ்வாதாரங்களையும், கல்வியையும் முன்னேற்றுவதற்காக செயற்படுகின்றனர். கொலம்பியாவில் இளைஞர்களினதும் உள்ளார்ந்து இடம்பெயர்ந்த மக்களினதும் சமூக அரசியல் பங்கேற்பைக் கட்டியெழுப்புகிறார்கள். காணி மற்றும் வளங்கள் சார்ந்து அடிக்கடி மோசமான முரண்பாடுகள் ஏற்படும் ஹெய்ட்டி, ஹொன்டுராஸ், கொலம்பியா ஆகிய நாடுகளில் AJWS பங்காளிகள் சூழலியல் முறைகளை மீள ஸ்தாபிப்பதுடன் பாதுகாப்பான வாழ்வாதாரங்களையும் கட்டியெழுப்புகின்றனர்.

## கவனத்தையீர்க்கும் பங்காளி

la Cienaga Grande del Bajo Sinu சமூக அபிவிருத்தி உற்பத்தியாளர்களின் சம்மேளனம் (ASPROSIG) ஆனது கொலம்பியாவிலுள்ள விவசாயிகள், கடற்தொழிலாளர்கள், Zenu ஆதிக்குடி மக்கள் ஆகியோரின் அடிமட்ட வலைப்பின்னலாகும். இவ்வமைப்பானது இயற்கைச் சூழலை பாதுகாப்பதற்காகவும் நிலையான விவசாயத்தைக் கட்டியெழுப்புவதற்காகவும் செயற்படுகிறது. AJWS உதவியுடன் ASPROSIG ஆனது 100 சிறிய விவசாய - சூழலியல் பண்ணைகளை நிர்மாணிக்கவும் உள்ளூர் மக்களின் உணவுப் பாதுகாப்பை விரிவாக்கவும் உள்ளார்ந்த இடப்பெயர்வை தடுப்பதற்குமான விரிவானதொரு முகாமைத்துவ திட்டமொன்றைத் தயாரிக்கிறது. “ *மாற்றுவழியில் கிராமிய அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கான எமது முயற்சிகள் எமது வாழ்வையும் இயற்கை வளங்களையும் பாதுகாப்பதற்கான எமது தனித்துவமான பாதையாகும். நாம் இங்கு ஆழமான வேர்களைக் கொண்டிருப்பதுடன் எமக்கு எமது இயற்கை முறைகளில் பேரன்பும் உள்ளது. எமது மூதாதையரின் வேர்களும் ஆற்றுடனும் மங்ரூஸ் மரங்களுடனான எமது உறவும் எமக்கு வாழ்வழிக்கிறது.”*

# ஆபிரிக்காவில் AJWSஇன் நிதியுதவி

AJWS ஆனது, ஆபிரிக்காவில் 16 நாடுகளில் வேலைசெய்கிறது. இதன் பங்காளி நிறுவனங்கள் சுகாதார வசதிகளையும் கல்வியையும் நிலையான வாழ்வாதாரத்தையும் பெறுவதற்கான வாய்ப்புகளை முன்னேற்றுவதுடன் வாய்ப்புகளற்ற விதிவிலக்கான சமூகங்களுக்கும் உதவுகின்றனர்.

HIV/AIDS இன் விளைவுகளை வெளிப்படுத்துவது, பாதிக்கப்பட்ட நோய்த் தாக்கத்துக்குள்ளான தனிநபர்களின் உணவு மற்றும் பொருளாதார பாதுகாப்பை முன்னேற்றுவது ஆகியனவே இக் கண்டத்தில் நிதியுதவி செய்வதற்கான முன்னுரிமைப் பெற்ற விடயங்களாகும். தென்னாபிரிக்காவிலுள்ள AJWS பங்காளிகள் நோயைத் தடுப்பு, பராமரிப்பு, மருத்துவ சிகிச்சைக்கான வாய்ப்புகளை ஊக்குவிக்கின்றனர். எத்தியோப்பியா, கென்யா, உகண்டா, சாம்பியா ஆகிய நாடுகளைச் சார்ந்த பங்காளிகள் வீட்டில் வைத்து பராமரிப்பு வழங்கல், இந்த வைரசுடன் வாழும் குடும்பங்களுக்கு புலமைப்பரிசில்கள் மற்றும் ஏனைய உதவிகள் வழங்குதல், பெற்றோரில்லாத பிள்ளைகளைப் பராமரித்தல் ஆகியவற்றைச் செய்கின்றனர். நைஜீரியா, கானா ஆகிய நாடுகளைச் சார்ந்த பங்காளிகள் பாலியல் தெரிவு சார்ந்து சிறுபான்மையினராய் இருப்போருக்கான சுகாதார பராமரிப்பு

மற்றும் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளை வழங்குவதற்காக செயற்படுகின்றனர்.

அன்னளவாக, ஆபிரிக்காவில் HIV/AIDS இனால் பாதிக்கப்பட்டோரில் 60 வீதமானவர்கள் பெண்களும் சிறுமிகளுமாவர். அசமத்துவமான அதிகாரக் கட்டமைப்பும் பால்நிலை பாரபட்சமும் இவர்களை மோசமாக நோய்த்தாக்கத்துக் குள்ளாக்குவதுடன் இவர்கள் வறுமையினாலும் வன்முறை மற்றும் அநீதியினாலும் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர். சிம்பாப்வேயிலும் ஆபிரிக்கக் கண்டத்தின் ஏனைய பகுதிகளிலுமுள்ள AJWS பங்காளிகள், பெண்களுக்கான நிலையான வாழ்வாதார வேலைத் திட்டங்களை ஏற்படுத்துவதுடன் குடும்ப வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகளையும் செய்கின்றனர்.

தொடர்ச்சியான உணவுப் பாதுகாப்பின்மையாது வாக்குரிமையற்ற சமூகங்களை மோசமான பட்டினிக்கும் சுரண்டலுக்கும் துஷ்பிரயோகங்களுக்கும் உள்ளாக்குகிறது. செனிகளில் உள்ள கிராமப்புறங்களுக்கு வழங்கும் நிதியுதவியானது நிலையான விவசாய நடவடிக்கைகள், சூழலியல் முகாமைத்துவம், சிறியளவிலான விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளுக்கான வறுவாயீட்டும் திட்டங்கள் ஆகியவற்றுக்காக பயன்படுத்தப்படுகிறது.

முரண்பாடுகளினால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கும் சாமாதானத்தை நோக்கி மாறும் நாடுகளுக்கும் AJWS ஆனது அவசர உதவி, உளவடு நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானத்துக்காக உதவுகிறது. கொங்கோ ஜனநாயகக் குடியரசிலும் சூடானிலும் பங்காளி நிறுவனங்கள் இடம் பெயர்ந்த சமூகங்களுக்கு நிவாரணமளிப்பதுடன் சிறுவர் போராளிகளை மீள சமூகத்துடன் இணைப்பதற்கான பிரச்சாரங்களையும் சமூக அடிப்படையிலான ஆயுதக் களைவு வேலைகளையும் மேற்கொள்கின்றனர். ருவான்டாவிலும் லைபீரியாவிலும் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் பெண்களின் பங்களிப்பின் முக்கியத்துவத்தை ஏற்படுத்துவதற்காக AJWS நிதியுதவி பயன்படுகிறது.

## கவனத்தையீர்க்கும் பங்காளி

எயிட்சுக்கு எதிரான நீர்ப்பீடனக் கல்வி (EVA) எனும் நிறுவனமானது 2005 இலிருந்து பங்காளியாக செயற்பட்டு வருகிறது. இது HIV தாக்கம் அதிகமாகக் காணப்படும் 3 நைஜீரிய மாநிலங்களில் பாடசாலை ஆசிரியர்களுக்கு பாலியல் மற்றும் மறுஉற்பத்தி சுகாதாரம் சார்ந்து பயிற்சியளித்து வருகிறது.

2008 இல் EVA நிறுவனமாது +OVC கல்விப் பிரச்சாரத்தை மேற்கொண்டது. இது பெற்றோர்கள் இல்லாத சிறுவர்களையும் பாதிப்புகளுக்குள்ளான சிறுவர்களையும் பாடசாலைகளில் சேர்த்துக்கொள்ளுமாறு அரச அதிகாரிகளுக்கும் பாடசாலை நிர்வாகிகளுக்கும் அழுத்தம் கொடுத்ததுடன் முறைசாரா கல்வி வேலைத் திட்டங்களுக்காகவும் பிரச்சாரம் செய்தது. இந்த முயற்சியுடன் ஆய்வுகள், ஆவணங்கள் மற்றும் வெளியீடுகள் ஆகியன HIV இனால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் கல்வி பெறும் வாய்ப்பை மட்டுப்படுத்தும் காரணிகள், இவர்கள் பாடசாலைக்குத் திரும்பும்போது பராமரிப்பாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெறுவதை கட்டியெழுப்புதல் குறித்து தகவல் வெளியிட்டன.

*“ இந்தத் தவணையில் எனது ஆங்கில ஆசிரியரிடமிருந்து நான் நிறையக் கற்றுக்கொண்டேன். நான் ஒரு சிறந்த பெண்ணாக வரவேண்டுமென்றால் நான் எனது முன்னுரிமைகளை சரியாக வரிசைப்படுத்த வேண்டும், நான் கடினமாக உழைக்க வேண்டும், எனது படிப்பில் கவனம் செலுத்த வேண்டும், மறுப்புத் தெரிவிக்க கற்றுக்கொள்ள வேண்டும் என்பதை எனக்கு உணர்த்தினார்.”*

Mnguember, மாணவி, அரசினர் மேல்நிலைப் பாடசாலை, Mbawa Benue State

## ஆசியாவில் AJWSஇன் நிதியுதவி

AJWS ஆனது ஆசியாவில் 8 நாடுகளில் வேலைசெய்கிறது. இங்குள்ள இதன் பங்காளி நிறுவனங்கள் இன, மத, பாலியல் தெரிவு சார்ந்து சிறுபான்மையினராய் இருப்போர், பெண்கள், சிறு விவசாயிகள், HIV/AIDS இனால் பாதிக்கப்பட்டோர் மற்றும் ஏனைய விளிம்புநிலை சமூகங்களின் சமத்துவத்துக்காக செயற்படுகின்றனர். அத்துடன் AJWS ஆனது 2004 சுனாமியினால் ஏற்பட்ட பாதிப்புகளை மீள புனரமைத்துக்கொள்வதற்காக உதவுடன் உரிமைகளற்றோரின் தேவைகள் மீதான அரசின் பொறுப்பு சார்ந்து கவனத்தைக் குவிப்பதுடன் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அவசர நெருக்கீட்டுகளுக்கான சமூகத்தின் நெகிழ்வான ஆயத்தங்கள் குறித்தும் கவனம் செலுத்துகிறது.

காணி உரிமையைப் பாதுகாப்பது மற்றும் இயற்கை வளத்தின் மீதான கட்டுப்பாடு ஆகியன ஆசியாவில் நிதியுதவிக்கான முன்னுரிமை விடயங்களாயுள்ளன. AJWS ஆனது இந்தியா, தாய்லாந்து, கம்போடியா ஆகிய நாடுகளில் சுரங்கத் தொழில், மரம் வெட்டுதல், நீர்த்தேக்க நிர்மாணம், பணப் பயிர்ச் செய்கையைக் குறியாகக் கொண்ட

விவசாயம் போன்ற பாரிய அளவிலான தொழிற்துறைத் திட்டங்களினால் தமது வாழ்க்கை முறை பாதிக்கப்பட்டுள்ள ஆதிக்குடிகளுக்கும் சமூகத்தினால் விளிம்புநிலைக்குள்ளாக்கப் பட்டிருப்போருக்கும் உதவுகிறது.

இந்தியா மற்றும் தாய்லாந்தில் AJWS மேற்கொள்ளும் நிதியுதவியானது தாழ்த்தப்பட்ட சாதி சமூகத்தினர் மற்றும் பதியப்படாத பர்மிய குடியமர்ந்தோர் மத்தியில் நிலவும் கட்டுப்பாடற்ற தொழில்சார் அசமத்துவம் மற்றும் உழைப்புச் சுரண்டல் தொடர்பாக பயன்படுத்தப்படுகிறது. இவர்கள் மோசமான தொழில் நிலைமைகளை எதிர்கொள்வதுடன் போதிய சட்டப் பாதுகாப்பும் மறுக்கப்பட்டவர்களாய் இருக்கிறார்கள். தொழில் உரிமைப் பயிற்சி, தொழில் கொள்கை சீரமைப்பு, சட்ட உதவி, கல்வி மற்றும் வேலைத்தள சுகாதாரமும் பாதுகாப்பும் போன்றவற்றுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது.

பால்நிலை மற்றும் பால் அடிப்படையில் நடைபெறும் வன்முறைகளையும் பாரபட்சங்களையும் எதிர்ப்பதென்பது ஆசியாவில் சிரமமானதாகும். இந்தியாவிலுள்ள பங்காளிகள் வளர்ந்த சிறுமியரினதும் குடும்ப வன்முறைக்கு உள்ளானவர்களினதும் தேவைகள் சார்ந்து விசேட கவனம் செலுத்துகின்றனர். காம்போடியாவில் AJWS பங்காளிகள் தொழிற்தளத்தில் நடைபெறும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையை, குறிப்பாக ஆடைத்தொழிற்சாலைத் தொழிலாளர்கள் மற்றும் பாலியல் தொழிலாளர்கள் மத்தியில் நடைபெறும் வன்முறையைக் குறைப்பதற்காக செயற்படுகின்றனர்.

மோசமான நீண்டகால முரண்பாடுகள் நடக்கும் பிரதேசங்களில் AJWS பங்காளிகள் சிவில் சமூகத்தைப் பராமரிக்கின்றனர். கிழக்கு பர்மாவில் இராணுவத்தின் இனச்சுத்திகரிப்பு நடவடிக்கையானது அரை மில்லியன் வரையிலான மக்களை தமது சொந்த வீடுகளிலிருந்து இடம் பெயர்த்துள்ளது. ஆப்கானிஸ்தானில் பல தசாப்தங்களாக நடைபெறும் யுத்தமானது அடிப்படை சுகாதாரம், கல்வி மற்றும் பொருளாதார உட்கட்டுமானங்களை சிதைத்துள்ளது. இலங்கையில் அதிகரித்துச் செல்லும் யுத்தமானது இனப் பிரிவினையை அதிகமாக்கியுள்ளது. இந்தச் சிக்கலான அவசர நிலைமையில் எமது பங்காளிகள் அவசியமான சமூக சேவைகளை வழங்குவதுடன் சமாதானத்துக்கான அடித்தளத்தையும் கட்டமைக்கின்றனர்.

## கவனத்தையீர்க்கும் பங்காளி

பர்மாவிலுள்ள காரன் மாணவர் வலைப்பின்னல் அமைப்பு (KSNG) முரண்பாட்டினாலும் இடப்பெயர்வினாலும் கல்வியில் ஏற்பட்டுள்ள இடைவெளிகள் சார்ந்து செயற்படுகின்றனர். அத்துடன் அவர்கள் சுதந்திரமானதும் ஜனநாயகமானதுமான பர்மாவை உருவாக்குவதற்கான போராட்டத்தில் வருங்காலத் தலைவர்களாக இருப்பதற்காக இளைஞர்களைத் தயார்படுத்துகின்றனர். AJWS நிதியுதவியுடன் KSNG ஆனது காரன் உள்ளார்ந்து இடம்பெயர்ந்த பாடசாலை (KIDS) வேலைத்திட்டத்தை நடத்துகின்றனர். இது காரன் மாநிலத்திலுள்ள 5 சமூக அடிப்படையிலான பாடசாலைகளுக்கு உதவுகிறது. ஆசிரியர் கொடுப்பனவு, கற்கை சாதனங்கள், மாணவருக்கான சீருடைகள், சுகாதார சேவை ஆகியவற்றை வழங்குகிறது.

*“நான் மூன்றாம் ஆண்டில் கல்வி கற்கும் போது பர்மிய இராணுவம் எமது கிராமத்தை எரித்து எம்மை பலவந்தமாக அங்கிருந்து ஓடச் செய்தது. 12 வயதில் நான் ஒரு சிப்பாயாகக் கடமையாற்ற நேர்ந்தது. இறுதியாக எனக்கு அகதிமுகாமுக்கு செல்லக் கிடைத்ததுடன் KSNG ஊடாக பாடசாலைக்குச் செல்லக் கிடைத்தது. எனது சமூகத்துக்கு நான் ஒரு பிரயோசனமான நபராக இருக்க வேண்டும். நான் எனது கல்வியைத் தொடர முயற்சிப்பதுடன் கல்வி கற்ற பின்னர் கரான் மாநிலத்துக்குத் திரும்பி என்னால் முடிந்த வகையில் உதவி செய்வேன்.”*

18 வயது மாணவர், KIDS

## நட்புசார் பங்காளித்துவ நிதியுதவித் திட்டம்

நட்புசார் பங்காளித்துவ நிதியுதவித் திட்டத்தின் மூலம் AJWS ஆனது விருப்பார்வமுடைய சர்வதேசிய மற்றும் பிராந்திய நிறுவனங்கள் AJWS இன் செயல்நோக்குக்கு ஒத்துழைக்கும் வகையில் அடிமட்ட அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து செயற்படும் போது அவற்றுடன் பங்காளித்துவத்தை ஏற்படுத்திக்கொள்கிறது.

நட்புசார் பங்காளிகள் என்போர் சர்வதேச பரிந்துரைப்பு நிறுவனங்கள், பயிற்சி மற்றும் மனித உரிமை அமைப்புகள், அடிமட்ட சிறிய புத்தாக்கமுள்ள நிதியுதவியாளர்களின் பிராந்திய வலைப்பின்னல்கள் என பல்வகைப்பட்ட ஒரு பிரிவாகும். அவர்கள் பயிற்சிகள் வழங்குவார்கள், நிதியுதவி செய்வார்கள், சமூக அடிப்படை அமைப்புகளுடன் இணைந்தும் அவர்கள் சார்ந்தும் பரிந்துரை செய்வார்கள் (நிறைய பங்காளிகள் அடங்கலாக), உள்ளூர்

ஆற்றலை அபிவிருத்தி செய்து உலக மாற்றத்துக்காக இயக்கங்களை உருவாக்குவர். நட்புசார் பங்காளிகள் ஊனமுற்றோர் உரிமைகள், பெண்களின் பிரச்சினைகள், அனர்த்த இடர் குறைப்பு மற்றும் அடிநிலை மக்களின் அபிவிருத்தி ஆகிய AJWS முன்னுரிமை அளிக்கும் விடயங்கள் சார்ந்து நிபுணத்துவத்தை வெளிப்படுத்துகிறார்கள்.

இந்த நிதியுதவிகள் AJWS ஆனது பங்காளிகளுக்கு மேலதிக வளங்களை வழங்கவும், எமது திறமைகளையும் அறிவையும் வளர்த்துக்கொள்ளவும் பிராந்திய மற்றும் சர்வதேசிய அளவில் மேற்கொள்ளப்படும் விதிவிலக்கான புத்தாக்க முயற்சிகளுக்கு உதவவும் எம்மை இயலுமானவர்களாக்குகிறது.

## கவனத்தையீர்க்கும் பங்காளி

Front Line: மனித உரிமைக் காவலர்களைப் பாதுகாக்கும் சர்வதேச அமைப்பு வன்முறையற்ற மனித உரிமை நடவடிக்கைகளை 90 நாடுகளில் பாதுகாப்பதுடன் அறிவையும் ஊட்டுகிறது. Front Line இன் மனித உரிமைக் காவலர்களுக்கான சர்வதேசப் பாதுகாப்பு மற்றும் ஆற்றல் அபிவிருத்தித் திட்டமானது, தனிநபர் பாதுகாப்பு, சுய அக்கறை மற்றும் காத்திரமான தனிநபர் பாதுகாப்பு அளவீடுகள் போன்றவை சார்ந்து அறிவூட்டல் செய்வதுடன், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் அச்சுறுத்தலுக்குள்ளாகும் போது உதவி வழங்கக்கூடிய பிராந்திய அடிப்படையிலான பயிற்றுனர்களின் வலைப்பின்னல் ஒன்றை உருவாக்குவதையும் இலக்காகக் கொண்டுள்ளது. AJWS ஆனது Front Line பயிற்சிகளைப் பெறுவதற்கு பங்காளிகளை பரிந்துரை செய்கிறது.

*“நேற்றுத்தான் நான் மனித உரிமைக் காவலர்களுக்கான ஐரோப்பிய யூனியனின் வழிகாட்டல்கள் சார்ந்து நடைபெற்ற பயிற்சிப் பட்டறையிலிருந்து திரும்பினேன். நாம் 15 ஐரோப்பிய யூனியன் சார்ந்த நாடுகளில் இருந்து வந்திருந்த இராஜதந்திரிகளை சந்தித்து அவர்களுடன் பழகினோம். அவர்கள் மனித உரிமை சார் விடயங்களில் செயல்பூர்வமாக இருப்பதுடன் இடர் நேரத்தில் அவர்களின் உதவியை எவ்வாறு பெறுவது என்பதையும் தெரிந்துகொண்டோம்.”*

Front Line பயிற்சியில் பங்குபற்றிய AJWS பங்காளி, இந்தியா.

நீதியை உருவாக்குவதற்கான யூதாயிசத்தின் கட்டளையினால் உந்தப்பெற்ற **அமெரிக்க யூதர்களின் உலக சேவை (AJWS)** ஆனது, ஒரு சர்வதேச அபிவிருத்தி நிறுவனமாகும்.

AJWS ஆனது இன, மத, தேசிய வேறுபாடற்று அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் மக்கள் மத்தியில் நிலவும் வறுமை, பட்டினி, நோய் போன்றவற்றை குறைப்பதற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. அடிமட்ட அமைப்புகளுக்கு நிதிவழங்கல், தொண்டர் சேவைகள், பரிந்துரை மற்றும் கல்வி ஆகியவற்றின் ஊடாக AJWS ஆனது சிவில் சமூகத்தையும், நிலையான அபிவிருத்தியையும் மனித உரிமைகளையும் பேணுகிறது. அநேரம் உலக பிரஜைக்கான விழுமியங்கள் மற்றும் பொறுப்புகளை யூத சமூகத்தில் ஊக்குவிக்கிறது.


New York City

45 36th Street

New York, NY 10018

t: 212.792.2900

800.889.7146

f: 212.792.2930

San Francisco

131 Steuart StreetSuite 200

San Farncisco, CA 94105

t: 415.593.3280

f: 415.593.3290

Washington, D.C.

1001 Connecticut Avenue, NW Suite 1200

Washington, D.C. 20036

t: 202.379.4300

866.531.9196

f: 202.379.4310

www.ajws.orj/grants ajws@ajws.org